டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.06.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 297 - Madurai | Online Edition

# பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்கள் கூட்டம் இந்தூரில் நிறைவு

புது தில்லி, ஜூன் 15

16-வது பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்கள் கூட்டம், இந்தியாவின் தலைமையின் கீழ், 2026 ஜூன் 12, 13 ஆகிய தேதிகளில் இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூரில் நடைபெற்றது. கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற பல கூட்டங்களின் மூலம், பிரிக்ஸ் வேளாண்மைப் பணிக்குழு நான்கு முன்னுரிமைகள் குறித்து விரிவாக விவாதித்தது :

முன்னுரிமை 1 : உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, வாழ்வாதாரங்கள், முன்னுரிமை 2: வேளாண் வர்த்தகம், ஒத்துழைப்பு, முன்னுரிமை 3: பருவநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய, நிலையான வேளாண்மை, முன்னுரிமை 4: வேளாண்மையையும் உணவு அமைப்பையும் எதிர்காலத்திற்கு ஏற்ப தயார்படுத்துவதற்காக, புத்தாக்கம் முதலீடுகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்.

உறுப்பு நாடுகளிடையே விரிவான கலந்தாய்வுகள் மூலம் எட்டப்பட்ட கூட்டுப் பார்வையையும் ஒருமித்த கருத்தையும் பிரதிபலிக்கும் வகையில், பிரிக்ஸ் வேளாண் அமைச்சர்களின் கூட்டுப் பிரகடனம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு கூட்டம் நிறைவடைந்தது.

கூட்டுப் பிரகடனத்தை இந்த இணையதள இணைப்பில் காணலாம் : https://d2jiw2zrmmyqt8.cloudfront.net/wp-content/uploads/2026/06/13131357/agriculture-doc.pdf

இந்தக் கூட்டுப் பிரகடனமானது, விவசாயிகளின் முக்கியப் பங்கை அங்கீகரித்து, உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் சிறு விவசாயிகளின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது. நிலையான வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்து,

அனைவரையும் உள்ளடக்கிய கிராமப்புற வளர்ச்சியை வளர்ப்பதன் மூலம், விவசாயிகளை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளுக்கு இது சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. அதே நேரத்தில், புத்தாக்கம், நிலைத்தன்மை, சமத்துவம் ஆகிய வற்றின் மூலம் வேளாண் அமைப்புகளின் திறனை வலுப்படுத்து வதற்கு, பிரிக்ஸ் உறுப்பு நாடுகளிடையே உள்ள ஒரு பகிரப்பட்ட தொலைநோக்குப் பார்வையையும் இது பிரதிபலிக்கிறது.

இக்கூட்டம், பிரிக்ஸ் நாடுகளிடையே இருதரப்பு ஒத்துழைப்பு களுக்கான வாய்ப்புகளை வழங்கியதோடு, சந்தை அணுகல், ஒத்துழைப்பு, பரஸ்பர நலன் சார்ந்த பிற வியங்கள் குறித்து ஆக்கப்பூர்வமான உரையாடலை எளிதாக்கியது.

இக்கூட்டத்தில், பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள், இணை/துணை அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட 100-க்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## மானிய விலை நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது

சிவகங்கை, ஜூன் 15

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி கூறியதாவது, 2026-2027 ஆம் ஆண்டிற்கான விவசாயிகளுக்கான சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள் திருப்புவனம் புதூரில் அமைந்துள்ள ஒருங் கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் புதிய நெல் ரகங்களான CO-51, CO-55, CO-52. TKM 15 மற்றும் RNR (குறுகிய கால நெல் ரகம் – CO-51. CO 55. TKM 15 மற்றும் RNR மற்றும் மத்திய கால ரகம் C0-52) நெல் விதைகள் மானிய விலையில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. மேலும் பருத்தி நுண்ணூட்டம், பயறுவகை நுண்ணூட்டம், திரவ உயிர் உரங்கள், பசுந்தாள் உர விதைகள் மானிய விலையில் உள்ளது எனவும் விவசாயிகள் அனைவரும் திருப்புவனம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேலைவாய்ப்பு முகாம் 2026

கோயம்புத்தூர், ஜுன் 15

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் நல மையம், வேளாண் துறையில் சிறந்த முறையில் பயிற்சி பெற்ற மற்றும் புதிய சிந்தனைகள் கொண்ட திறமையான இளையதலை முறையினரை முன்னணி நிறுவனங்களுடன் இணைக்கும் நோக்கில், வரும் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் மாபெரும் வேலைவாய்ப்புத் திருவிழா 2026-ஐ நடத்த உள்ளது. கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இந்த முகாம் நடைபெறுகிறது. இந்த வேலைவாய்ப்பு முகாமில், பல்கலைக்கழகத்தின் பல்வேறு உறுப்புக்கல்லூரி களில் இருந்து இளங்கலை வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், தொழில்நுட்பம், முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு பயிலும் 2000-க்கும் மேற்பட்ட இறுதி ஆண்டு இளம் பட்டதாரி மாணவர்கள் தங்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்ய ஆர்வத்துடன் பங்கேற்க உள்ளனர்.

எனவே, திறமையான மற்றும் ஆற்றல் மிக்க புதிய பணியாளர் களைத் தேர்ந்தெடுக்க முன்னணி வேளாண் சார்ந்த நிறு வனங்கள், விதை, உரம் மற்றும் பண்ணை இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்று மதி நிறுவனங்கள், சுய வேளாண் தொழில்முனைவோர் நிறுவ னங்கள், முன்னணி பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு முகமைகள் இம்முகாமைப் பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான தகுதியான மாணவர் களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

இந்த முகாமில் பங்கேற்க விரும்பும் நிறுவனங்கள், தங்களின் வருகையையும் காலிப்பணியிட விவரங்களையும் முன்கூட்டியே பதிவு செய்ய கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாணவர் நல மைய முதன்மையாளரின் (deansw@tnau.ac.in) மின்னஞ்சல் மூல மாகவோ அல்லது 0422-6611242 என்ற எண்களிலோ நேரடி யாகத் தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு

**சிறு பயிறு சாதம்**

**தேவைப்படும் பொருட்கள்**

அவல் ஊற வைத்தது ஒரு கப், சிறு பயிறு முளைவிட்டது இரண்டு கப், தேங்காய் துருவல் ஒரு கப்

பூண்டு 5 எண்ணிக்கை

மிளகு பொடி அரை தேக்கரண்டி, சீரகப் பொடி அரை தேக்கரண்டி, தேங்காய் எண்ணெய் ஒரு தேக்கரண்டி

மஞ்சப்பொடி ஒரு சிட்டிகை

**செய்முறை**

தேங்காய் துருவல், பூண்டு, மிளகு பொடி, சீரகப்பொடி, மஞ்சள் பொடி, இவற்றை ஒன்றாக சேர்த்து அம்மியில் வைத்து நன்கு நசுக்கி எடுத்து பின்பு ஊற வைத்த அவலுடன், முளைவிட்ட சிறு பயறையும் அரைத்த கலவைகளையும் ஒன்றாக சேர்த்து கிளறி, தேங்காய் எண்ணெய் விட்டு சாப்பிடலாம்.

**பயன்கள்**

சிறுநீர் கடுப்பு வராமல் தடுக்கிறது. நல்ல ஜீரண சக்தியை தருகிறது. மூலம் மலச்சிக்கல் இவற்றிற்கு இது மிகவும் நல்லது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# அனுமதி பெற்ற நிலையங்களில் மட்டுமே உரத்தை விற்பனை பில்லுடன் வாங்க வேண்டும் வேளாண்மை துறை அறிவுரை



அரியலூர், ஜூன் 15

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து உரம் விற்பனையாளர்களும் கண்டிப்பாக ஆதார் கார்டு கொண்டு பிஓஎஸ் பில் போட்டு, விவசாயிகளுக்கு கண்டிப்பாக உரம் வாங்கியதற்கான விற்பனை பில் அவசியம் தர வேண்டும். அதேபோல் விவசாயிகள் அனுமதி பெற்ற உர விற்பனை நிலையங்களில் மட்டுமே உரங்களை வாங்க வேண்டும் என வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் அறிவுரையின்படி வேளாண்மை துணை இயக்குனர் பொறுப்பு பரமசிவம் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், உர விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனையாளர்கள் அரசு மானியத்தில் உள்ள உரங்களை, பிஓஎஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், அரசு மானியம் இல்லாத தனியார் தயாரிக்கும் கலப்பு உரம் மற்றும் கூட்டுரங்கள் முறையான அனுமதி பெற்று விற்பனை செய்ய வேண்டும், உர மூட்டையில் கண்டிப்பாக லாட் நம்பர் மற்றும் உற்பத்தி செய்த தேதி இருக்க வேண்டும். இத்தகைய உரங்களை விவசாயி களுக்கு விற்பனை செய்யும் போது கண்டிப்பாக ரசீது வழங்கப் பட்டு, விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா மற்றும் டிஏபி உரங்களை பயிர்களுக்கு ஏற்ற அளவில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். ஒரே விவசாயிக்கு அதிகமாக விற்பனை செய்யக் கூடாது. விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன் படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா, டிஏபிக்கு மாற்றாக நானோ டிஏபி பயன்படுத்துவதால் உரத்திற்கான செலவை குறைப்பதுடன் மண்ணின் பலத்தை அதிகப்படுத்தலாம். விவசாயிகள் உரங்களை எப்பொழுதும் சாகுபடி செய்யும் அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண் மையுடன், சமச்சீர் உரங்கள் ஆன அனைத்து வகையான இயற்கை எரு, பண்ணை மற்றும் மண்புழு எரு உரம், பசுந்தால் பயிரை மடக்கி உழவு செய்தல், வேளாண்மை வட்டார மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்கள், அசோலா, நீலப்பச்சை பாசி, அனைத்து வகையான பயிர் களுக்கு தேவையான நுண்ணூட்ட சத்து உரங்களை சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்றும் தற்போது அனைத்து வகையான உரங்களும் யூரியா மற்றும் டிஏபி உரம் தவிர மற்ற உரங்கள் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் மூட்டையில் உள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனையாளர்கள் விற்பனை செய்யக்கூடாது என்றும், விவசாயிகள் சாகுபடி செய்யும் அனைத்து பயிர்களுக்கும் அதற்கு ஏற்ற வகையில் எப்போதும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையுடன், சமச்சீர் வகையில் உரங்களை பயிர் களுக்கு தேவையான வகையில் அனைத்து வகையான உரங் களை பயன்படுத்தி செயற்கை உரங்களை தேவையான அளவு மட்டுமே பயன்படுத்தி, பயிர் உற்பத்தி செலவை குறைத்து அதிக மாக மகசூல் பெற, எப்போதும் ஒருங்கிணைந்த உர மேலாண் மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# எதிர்ப்பு சக்தி கொண்ட பூச்சிகளின் மேலாண்மை

**அறிமுகம்**

வேளாண்மையில் பூச்சிக்கொல்லி மருந்துகள் தொடர்ந்து மற்றும் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுவதால், சில பூச்சிகள் அந்த மருந்துகளைத் தாங்கி உயிர்வாழும் திறனைப் பெறுகின்றன. இதுவே பூச்சிகளின் எதிர்ப்பு சக்தி எனப்படுகிறது. இதனால் பூச்சிக்கொல்லி மருந்துகளின் செயல்திறன் குறைந்து, பயிர் சேதம் அதிகரித்து, உற்பத்தி செலவும் உயர்கிறது. எனவே எதிர்ப்பு சக்தி கொண்ட பூச்சிகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும்.

**பூச்சி எதிர்ப்பு சக்தி உருவாகும் காரணங்கள்**

- ஒரே வகை பூச்சிக்கொல்லியை தொடர்ந்து பயன்படுத்துதல்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக மருந்து தெளித்தல்.
- தேவையற்ற மற்றும் அடிக்கடி மருந்து பயன்பாடு.
- ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை பின் பற்றாமை.
- பூச்சிகளின் விரைவான இனப்பெருக்கம் மற்றும் மரபணு மாற்றங்கள்.

**பூச்சிக்கொல்லி மருந்துகளை மாற்றி மாற்றி பயன்படுத்துதல்**

- ஒரே செயல் முறையைக் கொண்ட மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது.
- வெவ்வேறு செயல் முறைகளைக் கொண்ட மருந்துகளை மாறி மாறி பயன்படுத்த வேண்டும்.
- இது பூச்சிகளில் எதிர்ப்பு சக்தி உருவாகும் வேகத்தைக் குறைக்கும்.
- IRAC (Insecticide Resistance Action Committee) பரிந்துரை களைப் பின்பற்ற வேண்டும்.

### உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துதல்

- இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணிகள் மற்றும் வேட்டை யாடும் பூச்சிகளைப் பாதுகாத்தல்.
- டிரைக்கோகிராம்மா (Trichogramma), கிரைசோப்பெர்லா (Chrysoperla) போன்ற பயனுள்ள உயிரினங்களைப் பயன் படுத்துதல்.
- Bacillus thuringiensis (Bt) போன்ற உயிரியல் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல்.
- வேப்ப எண்ணெய் மற்றும் தாவரச் சாறுகளைப் பயன் படுத்துதல்.

### ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM)

- பொருளாதார சேத நிலையை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே மருந்து பயன்படுத்துதல்.
- பெரோமோன் பொறிகள் மற்றும் ஒளிப்பொறிகள் மூலம் கண்காணித்தல்.
- பயிர் சுழற்சி மற்றும் கலப்பு சாகுபடி முறைகளைப் பின்பற்றுதல்.
- பூச்சி தாக்கம் அதிகரிக்கும் முன்பே தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

### பயிர் மற்றும் வயல் மேலாண்மை முறைகள்

- வயல்களில் களை கட்டுப்பாட்டை மேற்கொள்ளுதல்.
- நோய் மற்றும் பூச்சி தாக்கம் பெற்ற தாவரப் பகுதிகளை அகற்றுதல்.
- சமச்சீர் உரமிடல் மற்றும் நீர் மேலாண்மை மேற் கொள்ளுதல்.
- எதிர்ப்பு சக்தி கொண்ட ரகங்களைத் தேர்ந்தெடுத்து பயிரிடுதல்.

### விழிப்புணர்வு மற்றும் விவசாயிகள் பயிற்சி

- பூச்சிக்கொல்லி மருந்துகளின் சரியான பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல்.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்தல்.

● எதிர்ப்பு சக்தி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.

● அரசு மற்றும் வேளாண் துறையின் பரிந்துரைகளை பின்பற்றுதல்.

**முடிவுரை**

பூச்சிகளின் எதிர்ப்பு சக்தி என்பது உலகளாவிய வேளாண்மைக்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. இதனை சமாளிக்க பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டும் நம்பாமல், உயிரியல் கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, பயிர் மேலாண்மை மற்றும் விவசாயிகள் விழிப்புணர்வு போன்ற முறைகளை இணைத்து செயல்படுத்த வேண்டும். இவ்வாறு செயல்பட்டால் பூச்சிக்கொல்லி மருந்துகளின் செயல்திறனை நீண்ட காலத்திற்கு பாதுகாத்து, நிலையான மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த வேளாண்மையை உருவாக்க முடியும்.

**'ஒரே மருந்து அல்ல, ஒருங்கிணைந்த மேலாண்மையே தீர்வு!'**



கட்டுரை ஆசிரியர் : ***ச.பூர்ணிமா, M.Sc. (Agri)., உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.***



# வாழைப்பழ ஏற்றுமதிக்கு தமிழக அரசு முயற்சி? தெரியுமா?

தமிழகத்தில் உணவுப்பதப்படுத்துதல் துறையில் முதலீட்டை ஊக்கு விப்பது மற்றும் வேளாண் விளைப் பொருட்களை ஏற்றுமதி செய்-விக்கும் பணிகளை ஊக்குவிக்க தமிழக அரசின் சிறு/குறு/ நடுத்தர தொழில் துறையின் கீழ் செயல்படும் டி.என் எபக்ஸ் (T.N. APEx) என்ற நிறுவனம் (TAMILNADU FOOD PROCESSING AND AGRI EXPORT PROMATION) மேற்கொண்டு வருகிறது என்பது அறிந்ததே.






**இந்த நிறுவனத்தின் பணிகள் என்ன?**

தமிழகத்தில் விளையும் அரிசி, மாம்பழம், வாழை, கொய்யா, தக்காளி, மிளகாய் ஆகிய பொருட்களை பதப்படுத்தி பிராண்டிங் மற்றும் பேக்கேஜ் செய்து சந்தைப்படுத்த உள்ளிட்ட மதிப்பு சங்கிலியை (VALVE CHAIN) உருவாக்கி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**வாழை ஏற்றுமதிக்கு என்ன செய்கிறது? தமிழகத்தில் வாழைப்பழ சாகுபடி பரப்பு தெரியுமா?**

தமிழகத்தில் 2.50 லட்சம் ஏக்கர் வாழைபழ சாகுபடி (BANANA CULTIVATION) நடக்கிறது. நாட்டிலே வாழை விளைச்சலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. குறிப்பாக திருச்சி, தேனி, ஈரோடு, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் பரப்பு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. வாழைத்தார்கள் விற்பனை செய்ய பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது தமிழக அரசின் முயற்சியால் வாழைப்பழ ஏற்றுமதி அதிகரிக்கும் நடவடிக்கைகளில் முதன்முறையாக 'திருச்சி', தேனி' போன்ற மாவட்ட வாழை சாகுபடி விவசாயிகள் 200 பேரை தேர்வு செய்து அவர்களுடன் உணவுபதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதிக்கான நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து (டை அப்) செய்து ஏற்றுமதிக்கான நடவடிக்கை களில் ஈடுபட்டு வருவதாக தகவல்.

**எவ்வளவு ஏற்றுமதி செய்ய உத்தேசம் தெரியுமா?**

500 டன் அதாவது 5 லட்சம் கிலோ வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய 200 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

**வாழை சாகுபடியாளர்களுக்கு என்ன என்ன உதவிகள் கிடைக்கும்?**

ஏற்றுமதி தரத்திற்கு இணையான வாழை பயிரிட இந் நிறுவனங்கள் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப உதவி உள்ளிட்டவை வழங்கும். சாகுபடி மற்றும் ஏற்றுமதி தொடர்பான புதிய புதிய தொழில்நுட்பங்களை வழங்கும். இதில் விவசாயிகள் மட்டுமின்றி படித்த இளைஞர்களும் ஏற்றுமதி தொழில் தொடங்கலாம். அவர்களுக்கும் அரசு உதவுகின்றன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மொடக்குறிச்சி வட்டாரத்தில் மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



ஈரோடு, ஜூன் 15

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் கஸ்பாபேட்டை கிராமத்தில் உள் மாவட்ட அளவில் மரவள்ளி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். பச்சியப்பன், தோட்டக்கலைத்துறை வல்லுநர், வேளாண்மை அறிவியல் நிலையம், கோபி, மரவள்ளி பயிர் வயலாய்வு மேற்கொண்டு பயிரைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் உர மேலாண்மை பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். நந்தகுமார், துணை வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மை உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் குறித்து விளக்கினார். கனிமொழி, தோட்டக்கலை அலுவலர், மொடக்குறிச்சி, தோட்டக்கலை மானியத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி, உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

# வேப்பநத்தம் கிராமத்தில் காய்கறி பயிருக்கான பண்ணை பள்ளி பயிற்சி



சேலம், ஜூன் 15

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், வேப்பநத்தம் கிராமத்தில் அட்மா திட்டத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி (Farm School) பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி, தொடக்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது: 'விவசாயிகள் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை வேளாண்மைக்கு மாற வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சாகுபடி செலவைக் குறைத்து, கூடுதல் லாபம் பெற முடியும்' என இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை ஊக்குவித்து பேசினார். தொடர்ந்து, பயிற்சியாளர் பிரவீன் விளைநிலங்களில் மண் மாதிரி சேகரிப்பதன் முக்கியத்துவம் குறித்தும், ஆய்வக பரிசோதனைக்காக எவ்வாறு சரியான முறையில் மண் மாதிரி எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவசாயிகளுக்கு நேரடியாகச் செயல் விளக்கம் செய்து காண்பித்தார். மற்றொரு பயிற்சியாளரான வரதராஜன் பேசுகையில், வெண்டைப் பயிரின் முக்கிய ரகங்கள் மற்றும் விதை நேர்த்தி செய்யும் முறைகள் குறித்து விளக்கினார். மேலும், பயிர் பாதுகாப்புக்குத் தேவை யான டிரைக்கோடர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் போன்ற உயிரியல் காரணிகளின் நன் மைகள் மற்றும் உயிர் உரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் விரிவான ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, உதவி தோட்டக்கலை அலுவலர் மூக்கையன் தோட்டக்கலைத் துறையின் கீழ் விவசாயிகளுக்குச் செயல்பட்டு வரும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி செய்திருந் தார். இப்பண்ணை பள்ளியில் வேப்பநத்தம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட முற்போக்கு விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உயிர்ம விதை நேர்த்தி முறைகள் மற்றும் பயன்கள்

உயிர்ம வேளாண்மை முறையில் மண்ணின் பௌதீக, ரசாயன மற்றும் உயிரியல் பண்புகள் மண்வளம் மேம்படும். இதனால் பயிர்வளர்ச்சிக்கு உகந்த எல்லா சத்துக்களும் கிடைப்பதால் விளைச்சல் பெருகுவதோடு தரமான விளை பொருள்களும் கிடைக்கும். பொதுவாக பயிர் விளைச்சலானது விதைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படும் விதைகளின் தரத்தைப் பொறுத்து உள்ளது. தரமான விதைகள் மற்றும் மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை கையாளவதால் சுமார் 40 சதவிகிதம் விளைச்சல் அதிகம் பெறலாம். உயிர்ம விதை உற்பத்தி சாதாரண விதை உற்பத்தி போலவே சில தனிப்பட்ட தொழில் நுட்பங்களை கையாள வேண்டும்.

## விதை நேர்த்தி

பொதுவாக உயிர்ம விதை உற்பத்தியில் விதை நேர்த்திக்கு உயிர் உரங்கள், தாவர இலைக்கரைசல்கள், இலைப்பொடிகள், பஞ்சகவ்வியம் மற்றும் உயிர் கட்டுப்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

| வ. எண். | உயிர்ம விதை நேர்த்தி முறைகள் | பயன்கள் |
|---|---|---|
| 1. | விதைகளை கோமியத்தில் ஊறவைத்தல் | விதை முளைப்பது மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது. |
| 2. | களிமண் விதைப்பூச்சு | விதை முளைப்பு மற்றும் வேர் வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது. |
| 3. | ட்ரைகோடெர்மா மற்றும் பேசல்லஸ்சபடிலிஸ் | வேர் சம்பந்தமான நோய்கள் கட்டுப்படுத்துகிறது. |
| 4. | சீமை அகத்தி பட்டை கரைசல், வசம்பு பொடி கரைசல் | விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சி களைக் கட்டுப்படுத்துகிறது. |
| 5. | எருக்கு இலைக்கரைசல் | நெல்லித்தண்டு துளைப்பானை கட்டுப்படுத்துகிறது. |

| | | |
|---|---|---|
| 6. | அரளி இலைக்கரைசல் | வெங்காயத்தில் நுனிகருகல் நோயைக் கட்டுப்படுத்துகிறது. |
| 7. | புங்கம் விதைக் கரைசல் | சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. |
| 8. | டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ | காய்கறிப்பயிர்களில் பூஞ்சாண நோயை கட்டுப்படுத்துகிறது. |

**பல்வேறு பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் உயிர்ம விதை நேர்த்தி முறைகள்**

| வ. எண் | பயிர் | விதை நேர்த்தி முறைகள் |
|---|---|---|
| 1. | நெல் | விதைப்பிற்கு முன் நெல் விதைகளை பஞ்ச காவ்யாவில் 30 மணிநேரம் ஊறவைத்தல் அல்லது நெல் விதைகளை 20 சதவீதம் வசம்பு கரைசலில் (500 கிராம்/பவுடர்/2.5 லிட்டர் தண்ணீர்) 30 நிமிடங்கள் ஊற வைத்து பின்புகாடா துணியில் கட்டி வைத்தல். |
| 2. | கொண்டைக் கடலை | விதைகளை 20 சதவிகிதம் புதினா இலை கரைசலில் 12 மணி நேரம் ஊற வைத்து விதைத்தல் அல்லது ஒரு கிலோ விதை களை மஞ்சள் (50 கிராம்) மற்றும் வசம்பு (15 கிராம்) பவுடரில் 10 மில்லி கலந்து 10 நிமிடம் கழித்து விதைத்தல். |
| 3. | பயறுவகைப் பயிர்கள் | விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ என்றளவில் விதை நேர்த்தி செய்து விதைத்தல். |
| 4. | மக்காச்சோளம் | விதைகளை 2% பஞ்ச காவ்ய கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து விதைத்தல். |
| 5. | கம்பு & ராகி | விதைகளை 2% பஞ்ச காவ்ய கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து விதைத்தல் |
| 6. | காய்கறி வகைகள் | விதைகளை (டிரைக்கோடெர்மாவிரிடி 4 கிராம்/கிலோ டிரைக்கோடெர்மா விரிடியில்) விதை நேர்த்தி செய்து விதைத்தல். விதைகளை 20% வசம்பு கரைசலில் (ஒரு பங்கு கரைசலில் 5 மடங்கு தண்ணீருடன் கலத்தல்) 20 நிமிடத்தில் ஊற வைத்து விதைத்தல் |

உயிர்ம வேளாண்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இயற்கை ஆதாரங்களையும், மண்வளத்தையும் பாதுகாத்து சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கலாம். எனவே உயிர்ம வேளாண்மையைப் பின்பற்றி தரமான பாதுகாப்பான உணவையும், மாசற்ற சுற்றுச் சூழலையும் வருங்கால சந்ததியினருக்கு அளிப்பது கடமையாகும்.

மேற்கண்ட இந்த தகவல் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான மதுரை சரக விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, பரமக்குடி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ச.முருகேஸ்வரி மற்றும் ப.வீரபாண்டியன் ஆகியோர் தெரிவித்துக் கொண்டனர்.



# கறவை மாடுகளுக்கு பாரம்பரிய முறையில் பராமரிப்பு குறித்து பயிற்சி

சேலம், ஜுன் 15

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தில் பெரிய கவுண்டாபுரம் கிராமத்தில் பால் பண்ணை தொழிலில் பாரம்பரிய பராமரிப்பு மற்றும் மருத்துவ முறைகள் குறித்து உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. உதவி தொழில்நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி விவசாயிகளை வரவேற்றார்.

பயிற்சியில் பெரிய கவுண்டாபுரம் கால்நடை உதவி மருத்துவர் துளசிராமன், கறவை மாடுகளின் பாரம்பரிய மருத்துவ முறைகள், ஆரோக்கிய பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை மூலிகைகளின் பயன்பாடு குறித்து விளக்கம் அளித்தார்.

மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் மாடுகளின் நலன் சார்ந்த மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

அயோத்தியாபட்டிணம் வட்டார துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், இயற்கை வேளாண்மை, உழவர் அடையாள எண் பெறுதல், பி.எம்.கிசான் திட்டம் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். பயிற்சியில் வன அலுவலர் தேசிங்கு ராஜன், கலந்து கொண்டு மகாகனி, தேக்கு, செம்மரம், நாவல் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பருவமழை பெய்தவுடன், விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படும், பெற்று பயனடையுமாறு விளக்கம் அளித்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, விளைநிலம் காப்போம் இயக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உதவி வேளாண்மை அலுவலர் மகேஸ்வரி, கலந்து கொண்டு விவசாயிகள் அடையாள எண் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கம் அளித்தார். இதில் விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கங்களை பெற்றனர். 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்து இருந்தனர்.

# உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, ஜுன் 15

புதுக்கோட்டை மாவட்டத்தில் குறுவை பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவும் சில்லரை விற்பனை யாளர்கள் உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது விவசாயிகள், நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 5168 மெட்ரிக் டன்கள், டிஏபி 1428 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1250 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 4854 மெட்ரிக் டன்கள், சூப்பர் பாஸ்பேட் 731 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து மொத்தம் மற்றும் சில்லரை உரிமம் பெற்ற உர விற்பனையாளர்கள் மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு விற்பனை செய்வதோ அல்லது பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்வதோ கூடாது. மேலும், இது தொடர்பான ஆய்வின் போது கண்டறியப் பட்டாலோ அல்லது புகார் ஏதும் பெறப்பட்டாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் கவனத்திற்கு

● உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.

● உர விற்பனையாளர்கள் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை கொள்முதல் செய்வதும், விவசாயிகளுக்கு விற்பனை செய்வதும் கூடாது.

● உர மூட்டையின்மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.

● விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

● உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும். விற்பனை முனையக் கருவியில் உள்ள இருப்பும், உண்மை இருப்பும் சரியாக இருக்குமாறு உர இருப்பு விவரத்தினை பராமரித்திட வேண்டும்.

● விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.

● தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.

மேலும், மாவட்டத்தில் உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் 1955, உரக்கட்டுபாட்டு ஆணை 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது.



# மொடக்குறிச்சி வட்டாரத்தில் பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, ஜூன் 15

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 24 வேலம்பாளையம் கிராமத்தில் உள் மாவட்ட அளவில் பயறுவகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இரா.சிவக்குமார்,வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு, தலைமை தாங்கி மண்வளத்தை பாதுகாக்கும் முறைகள், அங்கக வேளாண்மை, செயற்கை உரக்கட்டுபாடு மற்றும் நுண்ணீர் பாசனம் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

பச்சியப்பன், தோட்டக்கலைத்துறை வல்லுநர், வேளாண்மை அறிவியல் நிலையம், கோபி, பயறுவகை பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் உர மேலாண்மை பற்றி விளக்கமாக பயிற்சி அளித்தார்.

N.காவியா, வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, உயிர் உரங்களின் பயன்கள் குறித்து விளக்கினார். ஈ.லோகநாதன், வேளாண்மை உதவி அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மை உழவர் நலத்துறை மானியத்திட்டங்கள் குறித்து கூறினார்.

அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக் குறிச்சி, மண்மாதிரி எடுத்தல், உழவன் செயலி மற்றும் இநாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார்.

விஜயகுமார், உதவி தொழில்நுட்ப மேலாளர், விவசாய அடை யாள எண் பதிவு செய்தல் குறித்து கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி நன்றியுரை கூறினார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஜமாபந்தியில் விவசாய தனித்துவ அடையாள எண் பதிவு செய்வதற்கு சிறப்பு முகாம்

புதுக்கோட்டை, ஜுன் 15

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் 12,960 நில உரிமைதாரர் விவசாயிகள் இருந்து வரும் நிலையில் 9,509 விவசாயிகள் மட்டுமே நில உடைமை அடையாள எண் பதிவு மேற்கொண்டுள்ளனர். தற்போது பாரத பிரதமரின் விவசாயிகளின் கவுரவ நிதி உதவி திட்டத்தின் கீழ் தவனை தொகையினை தொடர்ந்து பெறுவதற்கும் பயிர் காப்பீடு செய்யவும் இரசாயண உரங்கள் வாங்குவதற்கும் மற்றும் மத்திய மாநில அரசின் பிற மானியத் திட்டங்களில் பயன் பெறுவதற்கும் விவசாயிகள் தங்களது நில உடமைகளை பதிவு செய்து கொள்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

இந்த நில உடைமை செய்யும் பணியை விரைவுபடுத்தும் நோக்கத்தில் அனைத்து பொது சேவை மையங்கள் மூலமாகவும் நிலவுடமை பதிவு செயல்படுத்தப்படுகிறது. பதிவு பணியின் போது நில உரிமைதாரரின் பெயர் இன்னைறய நிலைக்கு சரியாக மாற்றம் செய்யப்படாமல் இருப்பதும் ஆதார் எண்ணுடன் மொபைல் எண் இணைக்கப்பட்ட கைபேசி தற்போது பயன்பாட்டில் இல்லை என்பதும் கண்டறியப்பட்டால் அதன் சம்மந்தப்பட்ட விவசாயி சரி செய்த பிறகு பதிவேற்றம் செய்யப் படும். எனவே மீதமுள்ள 3451 விவசாயிகளும் இத்திட்டத்தில் பயன்பெற பொன்னமராவதி வட்டாச்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையில் வருகின்ற ஜுன்-16ல் காரையூர் பிர்கா, ஜுன்-17ல் அரசமலை பிர்கா, ஜுன்-18ல் பொன்னமராவதி பிர்காவில் நடைபெறவிருக்கும் வருவாய் தீர்வானய நிகழ்ச்சி (ஜமாபந்தி) போது சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமில் வேளாண்மைத்துறை தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பாக விவசாயிகளின் நில உடமைகள் சரிபார்க்கப்பட்டு அடையாள எண் வழங்கும் பணி நடைபெற உள்ளது. எனவே இதுவரை விவசாய அடையாள எண் பெறாத விடுபட்ட விவசாயிகள் அனைவரும இம்முகாமில் கலந்து கொண்டு உடனடியாக நிலவுடைமை பதிவு மேற்கொள்ளலாம் என பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிஷா பேகம் தெரிவித்துள்ளார்.

# வேளாண் காடுகள் குறித்த பயிற்சி



இராணிப்பேட்டை, ஜூன் 15

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு வேளாண் காடுகள் குறித்து பயிற்சி சித்தேரி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமார் தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில், மண்வளம் காத்தல், மண் பரிசோதனை, இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல் மூலம் விவசாயிகள் உரத் தேவையை குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வனத்துறை சார்பில் கலந்து கொண்ட வன ஆய்வாளர் தமிழரசன் மரங்கள், பயிர்கள் மற்றும் சில சமயங்களில் கால்நடைகளை ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்து வளர்க்கும் முறையே வேளாண் காடுகள் எனப்படும் எனவும் அனைவரும் மரங்கள் மற்றும் விவசாய பயிர்கள் இணைந்து வளர்க்கப்படும் போது மண்வளம் பாதுகாக்கப்பட்டு, நீர் சேமிப்பு திறன் அதிகரித்து உயிரின பல்வகைமை மேம்பாடு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்கிறது. இவை மண் அரிப்பை குறைத்து, கார்பன் சேமிப்பை அதிகரித்து காலநிலை மாற்றத்திற்கு எதிரான ஒரு அரணாக அமைகிறது மற்றும் நீண்ட கால வருமானத்தை தருகிறது. சரியான முறையில் திட்டமிட்டு தேக்கு, வேங்கை போன்ற மரங்களை வரப்பு ஓரத்தில் நட்டு முதல் ஐந்து வருடங்களுக்கு உளுந்து, பச்சை பயறு, மணிலா சாகுபடி செய்வதன் மூலம் மண்வளம் அதிகரித்து நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது என விளக்கம் அளித்தார். ஊராட்சி மன்ற தலைவர் களஞ்செழியன் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் திவ்யஸ்ரீ பேசுகையில் பயிற்சி சுழற்சி முக்கியத்துவம், நுண்ணூட்டச் சத்துக்கள் பயன்பாடு, ஊடுபயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் ரியாஸ் உழவர் அடையாள எண் பதிவு செய்வதின் முக்கியத்துவம் மற்றும் விளைப் பொருட்களை மதிப்பு கூட்டுதல் குறித்து பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி மண் பரிசோதனை செய்து அதன் பரிந்துரை படி தேவைக்கேற்ப உரங்களை இட்டு விவசாயிகள் உரப் பயன்பாட்டை குறைத்து பயன்பெற வேண்டும் என கூறினார். பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் மற்றும் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# காளான் வளர்ப்பு குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், ஜுன் 15

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், வட்டார வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின்கீழ் காளான் வளர்ப்பு குறித்தமாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி இளமங்கலம் கிராமத்தில் நடைபெற்றது.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமை வகித்துப் பேசுகையில்,







விவசாயிகள் சாகுபடியின் போது மண் ஆய்வு செய்து பயிருக்குத் தேவையான அளவு உரங்களை மட்டும் இட்டுசாகுபடி செலவைக் குறைத்து மண் வளத்தைப் பாதுகாத்து அதிக மகசூல் பெறலாம் எனவும் விவசாயிகள் அனைவரும் வேளாண் துறை மற்றும் சகோதரத் துறைகளின் திட்டங்களைப் பெற்று பயனடைய விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் எனவும் விளக்கினார்.

கிரீடு வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி பெற்று காளான் சாகுபடி மேற்கொண்டு வரும் பெண் தொழில் முனைவோர் சுஜாதா ரமேஷ், காளான் வித்துக்கள் கிடைக்குமிடம், விலை விபரங்கள், காளான் சாகுபடிக்குத் தேவையான மூலப்பொருட்கள், காளான் வளர்ப்புக்குத் தேவையான வைக்கோல் பைகள் தயார் செய்து வித்துக்களை இடும் முறை, வெப்பநிலை பராமரிப்பு ஆகிய தொழில் நுட்பங்களை விளக்கினார்.

இத்துடன் காளான் வளர்ப்பு குறித்த செயல்விளக்கத்தினையும் செய்து காட்டினார். இப்பயிற்சியுடன் விளைநிலம் காப்போம் இயக்கத்தின் விழிப்புணர்வு முகாமும் நடத்தப்பட்டது. இம்முகாமில் கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் கலந்து கொண்டு இயற்கை வேளாண்மை, மண்வளத்தைப் பாதுகாத்தல், அங்கக மற்றும் இயற்கை உர பயன்பாடுகள், பசுந்தாள் உர பயன்பாடு, நுண்சத்து பயன்பாடு, பாரம்பரிய அரிசி போன்ற ஆரோக்கிய மான உணவு முறைகள், நிலவி வரும் காலநிலை மாற்றங் களுக்கேற்ப அவற்றை எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவை குறித்து விளக்கினார். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் உயிர் உரங்கள் பயன்பாடு குறித்தும் விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஆரோக்கியராஜ், மகேஷ் குமார், இளமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் அன்புசெல்வி, ஜெயா ஆகியோர் பயிற்சிக்கான முன்னேற்பாடுகளை செய்திருந்தனர். இளமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை ஜமாபந்தியில் விவசாயிகள் அடையாள எண் பதிவு, பட்டா மாறுதல் மேற்கொள்ள சிறப்பு முகாம்

புதுக்கோட்டை, ஜூன் 15

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் விவசாய பயனாளி தரவுகளை அரசின் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதுடன், பயிர் சாகுபடி விவரங்கள் மற்றும் அரசு வழங்கும் மானியங்கள், உதவித் தொகைகள் போன்ற அனைத்து தகவல்களையும் பதிவு செய்யும் வகையில், அனைத்து விவசாயிகளுக்கும் "விவசாயி அடையாள எண்" வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் விவசாயம் சார்ந்த மானியங்கள், காப்பீடு, பயிர்சேத நிவாரணம் மற்றும் உதவித் தொகைஉள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கும் இந்த அடையாள எண் அவசியமாகும். விவசாய அடையாள எண் பதிவு பணியானது தற்சமயம் நேரடி பட்டாதாரர்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்சமயம் கந்தர்வகோட்டை தாலுக்காவில் 16.06.26 அன்று புதுநகர் வருவாய் சரகம், 17.06.26 அன்று கல்லாக்கோட்டை வருவாய் சரகம் மற்றும் 18.06.26 அன்று கந்தர்வகோட்டை வருவாய் சரகத்திற்க்கு உட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ளது.

எனவே வாரிசுரிமை அடிப்படையில் நிலத்தினை விவசாயம் செய்யும் விவசாயிகள், வாரிசுரிமை அடிப்படையில் தற்சமயம் நடைபெறும் வருவாய் தீர்வாயத்தினை (ஜமபந்தி) பயன்படுத்தி பட்டா மாறுதல் மேற்கொண்டு, விவசாய அடையாள எண் பதிவு செய்திடவும், வருவாய் தீர்வாயம் நடைபெறும் நாட்களில் கந்தர்வகோட்டை தாலுக்கா அலுவலகத்தில் விவசாய அடையாள எண் பதிவு சிறப்பு முகாமில் இதுவரை பதிவுகள் மேற்கொள்ள விவசாயிகள் தங்கள் நில உடமை பதிவுகளை மேற்கொண்டு விவசாயிகள் பயனடையுமாறு கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) ரா.விக்னேஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

# பயிர் கழிவுகளை உரமாக மாற்றும் முறை

விவசாயிகள் நிலங்களில் பயிர் அறுவடை மேற்கொள்ளும் போது அறுவடை போக மீதமுள்ள பயிர்க் கழிவுகளான நெல் வைக்கோல், மக்காச்சோளத் தட்டை, சோளத்தட்டை, பருத்தி செடி போன்ற தேவையற்ற பகுதிகள் பயிர்க் கழிவுகள் (Crop Residues) என அழைக்கப்படுகின்றன. இவற்றை வயலில் எரிப்பதற்குப் பதிலாக, இயற்கை உரமாகவோ அல்லது மதிப்புமிக்க பொருட்களாகவோ மாற்றுவது சிறந்தது.

நெல், வைக்கோல், சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளத்தட்டை போன்ற தானியக் கழிவுகளும், பருத்திச் செடிகள் மற்றும் கரும்புத் தோகை போன்ற பணப்பயிர் கழிவுகள் மற்றும் நிலக்கடலைத்தோல், தேங்காய் நார் மற்றும் மரவட்டை கழிவுகள் போன்ற பிற பயிர்க் கழிவுகளில் இருந்து இயற்கை உரம், கால்நடைத் தீவனம், மதிப்பு கூட்டுதல் மூலம் பல முறைகள் உள்ளன.

பயிர்க் கழிவுகளை சிறு துண்டுகளாக வெட்டி, சாணம் மற்றும் மாட்டின் சிறுநீருடன் கலந்து 3 முதல் 4 மாதங்கள் நிழலில் மக்கச் செய்வதன் மூலம் சிறந்த உரம் தயாரிக்கலாம். மேலும் மண்புழு உரம் (Vermi Compost) தயாரிக்கவும், காளான்கள் வளர்க்கவும் பயன்படுகின்றன. வைக்கோல் மற்றும் மக்காச்சோளத் தாள்கள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன.

பயிர்க் கழிவுகளை முறையாக நிர்வகிப்பதன் மூலம் மண்வளம் மேம்படுவதுடன் காற்று மாசும் தடுக்கப்படுகிறது. பயிர்க் கழிவுகள் மக்கி உரமாவதால் மண்ணிற்குத் தேவையான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் இயற்கையாக கிடைக்கின்றன. மண்புழுக்கள் மற்றும் நன்மை செய்யும் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை அதிகரித்து மண் பொலபொலப்பாகும். இதனால் இரசாயண உரங்களின் பயன்பாட்டைக் கறைத்து பணத்தைச் சேமிக்கலாம். சோளம், கம்பு மற்றும் நெல் கழிவுகள் கால்நடைககுக்கு சிறந்த தீவனமாகப் பயன்படுகின்றன. பயிர்க் கழிவுகளை வயலில் வைத்து எரிப்பது தடுத்து நிறுத்தப்படுவதால், புகை மற்றும் காற்று மாசு ஏற்படுவது முற்றிலுமாகத் தவிர்க்கப்படுகிறது.

காற்றில் கரியமில வாயு கலப்பது குறைந்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது என்பதனை மதுரை விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, விருதுநகர் வேளாண்மை அலுவலர்கள் ஐ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்து உள்ளனர்.